சொன்னேன். நேற்றே அவற்றைப் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இன்று அவை கூடுவதால் பத்திரிகையில் வெளியிடுவதைவிட—இந்தப் பேரவைக்கு மதிப்புத் தந்து, இந்தப் பேரவையில் வெளியிடுவதே சிறப்பாக இருக்கும் என்று கருதி—நேற்று தயாரித்த அறிக்கையை பத்திரிகையில் வெளியிடாது நான் இன்று இந்தப் பேரவையில் வெளியிட்டேன். நான் வெளியிடப்போகிற அறிக்கையைப் பார்த்த பின் தாங்கள் ஒரு முடிவு எடுக்கப் போவதாக மாணவர்கள் சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு வேலைநிறுத்தம் இருக்கக்கூடும். ஆனால் எந்த விதமான தகவலும் இதுவரை வரவில்லை. இன்று இந்தப் பேரவையில் நான் 82-வது விதியின்படி வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்த பின்னர் அவர்கள் நாளை வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு தங்கள் தங்கள் கல்லூரிகளுக்குச் செல்வார்கள் என்று நினைக்கிறேன். செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதற்கு உறுதுணை யாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 41 (3)-வது விதியின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் எழுப்பக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

6. கவன ஈர்ப்பு.

சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டப்பகுதியில் பாசன வசதித் திட்டம்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், சாத்தனூர் அணைக்கட்டு ஆயக்கட்டில் சம்பந்தப்பட்ட அயன் நஞ்சை நிலங்கள் (ஏரிகளின் கீழுள்ள) எப்பொழுதும் ஈரம் உலராமல் எந்தப் பயிரும் செய்வதற்கு லாயக்கற்ற கோரைகள் முளைத்துள்ளன. இப்படிப்பட்ட நஷ்டங்களைப் போக்கவும் பயிர்கள் நல்ல நிலைமைக்கு வருவதற்கும் வடிகால் வசதிகள் செய்து கொடுக்க ஒரு ஸ்கீம் தயாரிக்கப்பட்டு